**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 142/2022</u>**
**<u>நாள் 09/02/2026 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – அலமேலு (DW1) | க/பெயர் – மோகன் |
| வயது – | தொழில் – TNEB |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 17.12.2019 தேதியிட்ட மனுவின் உண்மை நகல் **பி.சா ஆ 1** ஆகவும்,

(2). 23.07.2025 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பிறப்பித்த உத்தரவு உண்மை நகல் **பி.சா ஆ 2** ஆகவும்,

(3). ஜி. செல்வராஜ் என்பவரின் பணிப்பதிவேட்டின் உண்மை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிநகல் **பி.சா ஆ 3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த செல்வராஜ் என்பவரின் மனைவி தேவகி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ தே போல் செல்வராஜ் என்பவரின் பணி பதிவேட்டில் தேவகி அவருடைய மனைவி என்று பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.சாஆ 1 ஆவணத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அதை பெற்றதற்கான அலுவலக முத்திரை உள்ளது. பி.சா ஆ 1 மனுவை செல்வராஜ் கொடுக்கவில்லை என்றால் அவர் கொடுத்ததாகதான் அலுவலக பதிவேடுகளில் உள்ளது. மேற்படி ஆவணத்தில் எந்த நீதிமன்றத் தீர்ப்பின் படி தீர்ப்பு வழங்கபட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. பி.சா ஆ 3 ஆவணத்தில் செல்வராஜ் என்பவருக்கும் வாதி தேவகிக்கும் இடையே விவாகரத்து பொன்னேரி 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்வராஜ் என்பவர் 2022 ஆம் வருடம் இறந்துவிட்டார் என்றும் அவருடைய பணிப்பதிவேட்டில் நாமினி ரத்து செய்த உத்தரவு 23.07.2025 ல் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல்செய்யப்பட்டு 3 வருடங்கள் கழித்துதான் உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பணி சுமையின் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது.

3. செல்வராஜ் இறந்தவுடன் வாதி 27.12.2022 தேதி 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த கடிதம் எங்கள் கோப்பில் உள்ள அதன் விவரம் தெரியாது. அதில் வாதி சிறிது காலம் செல்வராஜ் என்பவரிடம் இருந்து பிரிந்து அவருடைய சகோதரர் வீட்டில் தங்கியிருந்தார் என்றும் அந்த கால கட்டத்தில் தவறான முகவரியை கொடுத்து செல்வராஜ் ஒருதலைபட்சமாக தீர்ப்பு பெற்றுள்ளார் என்றும் அதனால் அந்த தீர்ப்பை ஏற்க்ககூடாது என சொல்லியுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது.

பி.சா ஆ 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் போலியானவை என்றும் அவை வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் சரியாக தெரியாது என்றும் ஆனால் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் ஏற்க்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**